வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சரசு | தொழில் | : | அஞ்சலக உதவியாளர்(ஓய்வு) |
| தந்தை பெயர் | : | மணியன் | வயது | : | |
| கிராமம் | : | ஒட்டர்பாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22.07.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 22.07.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து அஞ்சலக உதவியாளராக ஓய்வுபெற்று இருந்து வருகிறேன். 1996 ஆம் வருடம் பல்லடம் அஞ்சல ஆர் டி பிரிவில்எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 16.01.1996 ஆம் பல்லடம் அஞ்சலகத்தில் திரு. ராஜன் என்பவர் சேமிப்பு வங்கி பிரிவில் போஸ்டல் அசிஸ்டன்டாக பணிபுரிந்து வந்தார். அப்போது சி.ஆர்.மணி என்பவர் போஸ்ட் மாஸ்டராக பணிபுரிந்தார். அப்போது திரு .ராஜன் என்பவர் 3 நாட்கள் சிறு விடுப்பில் சென்றுவிட்டதால் போஸ்ட் மாஸ்டர் என்னை சேமிப்பு பிரிவில் பார்க்குமாறு உத்திவிட நான் சேமிப்பு பிரிவை கவணித்தேன். அப்போது ஹரி சங்கர் திவாரி என்பவர் பணம் எடுப்பதற்ககாக அஞ்சலகம் வந்திருந்தார் அவருடைய பாஸ் புக் எண் .304104 என்ற பாஸ்புக்கையும் வித்டராவல் சிலிப்பையும் எழுதிக்கொடுத்தார் அதை நான் சரிபார்த்தபோது எங்களுடைய லட்ஜரில் உள்ள பணத்திற்கும் பாஸ் புக்கில் உள்ள பணத்திற்கும் வேறுபாடு இருந்தது. அதனால் நான் அந்த பாஸ் புக்கையும் வித்ட்ரால் படிவத்தையும் போஸ்ட் மாஸ்டர் சி.ஆர் .மணியிடம் கொடுத்தேன். அவர் லட்ஜரையும் பாஸ்

புக்கையும் சரிபார்த்தார். அதில் வேறுபாடு உள்ளது என்று தெரிந்து எஸ் பி 26 ரெசீப்டு(Preliminary receipt) கொடுக்கப்பட்டது. அந்த பாஸ்புத்தகத்தையும் வித்ட்ராவல் சிலிப்பையும் அஞ்சலக அலுவலகத்தில் வைத்துக்கொண்டோம்.

2) இது குறித்து திருப்பூர் தலைமை அலுவலகத்திற்க்கு தெரிவித்தோம். இந்த அக்கவுண்ட் ஆனது ஈரோடு தலைமை அலுவலகத்தில் இருந்து ட்ரான்ஸ்பர் ஆகி பல்லடம் அலுவலகத்திற்கு வந்ததுள்ளது அதில் நான்கு மற்றும் ஐந்து ட்ரான்சேக்சன் நடந்துள்ளது. அதன்பிறகு என்னை என்.ஜீ.ஆர் ரோட்டில் உள்ள போஸ்ட் ஆபீஸ்சிற்கு டெப்டேசனாக என்னை அனுப்பிவைத்தார்கள். 27.02.1996 ல் வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.த.சா.ஆ **3** ல் உள்ள பாஸ் புக் மற்றும் லட்ஜர் மற்றும் எஸ் பி 3 கார்ட் மற்றும் வித்ட்ராவல் பார்ம் ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) நான் அங்கு பணிபுரிந்த சமயத்தில் மொத்தம் எத்தனை பணியாளர்கள் அந்த அஞ்சல் அலுவலகத்தில் இருந்தோம் என்றால் 4 கிளார்க் மற்றும் போஸ்ட் மாஸ்டர் மணி வேலை பார்த்தோம். நான்கு கிளார்க்கில் நான் ஒருவர் என்றால் சரிதான் நான் ரெக்கரிங்க டெப்பாஸிட் பிரிவில் வேலை செய்தேன். ராஜன் எந்த பிரிவில்வேலைப்பார்த்தார் என்றால் சேமிப்பு பிரிவில் வேலை பார்த்தார் . மற்ற இருவர் எந்த பிரிவில் வேலைப்பார்த்தார் என்றால் டெரஸ்ஸரியில் ஒருவரும், மற்றொருவர் டெலிகிராம் பிரிவில் வேலைப்பார்த்தார். டெரஸ்ஸரி பிரிவில் வேலை செய்தவருக்கு என்னவான பணியின் செயல்கள் என்றால் அந்த பணியின் பெயர் கேசியர் என்று சொல்லபடும். அவர் எங்கள் பிரிவின் உள்ளையே பணப்பரிமாற்றத்தை பார்த்து கொள்பவர் என்றால் சரிதான். எனக்கு தலைமை அதிகாரி மணி

ஆவார் அவர் சொல்லும் வேலைகளை செய்ய வேண்டுமா என்றால் எங்களது வேலையை நாங்கள் செய்வோம் அதை அவர் சரிபார்ப்பார். எங்களது பணிக்கு கடமை பொறுப்புகள் உண்டு என்றால் சரிதான்.

2) ராஜன் மூன்று நாட்கள் சிறுவிடுப்பில் சென்றபோது அந்த பணியை மேற்கொண்டவர் யார் என்றால் நான் அந்த பணியை மேற்கொண்டேன். 16.01.1996 தேதிக்கு முன்னால் பல்லடம் கிளையில் சேமிப்பு பிரிவில் வேலை செய்தேனா என்றால் செய்யவில்லை. ஹரி சங்கர் திவார் வித் ட்ராவல் சிலிப்பில் கையெழுத்த போட்டு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். வித் ட்ராவல் பார்மில் கவுண்டர் பாயில் இனைந்து இருக்குமென்றால் சரிதான். அவர் கொடுத்த பாஸ்புக்கில் உள்ள தொகைக்கும் லெட்ஜருக்கும் வித்தியாசம் இருகிறதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் வித்தியாசம் இருந்தது.

3) வித்ட்ராவல் பார்முடன் சேர்ந்த கவுண்டர் பாயிலையும் போஸ்ட் மாஸ்டரிடம் ஒப்படைத்தேனா என்றால் சரிதான். நீதிமன்றம் என்னிடம் காண்பித்தது மேற்சொன்ன வித்ட்ராவல் பாமுடன் இனைந்திருந்த கவுண்டர்பாயில் மட்டும் தான் காட்டப்பட்டதா என்றால் சரிதான். நான் ஹரி சங்கர் திவாரியிடம் பாஸ்புக்கில்உள்ள பணம் லெட்ஜரில் இல்லை என்பதற்காக புகார் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. ஆனால் சொன்னேன். போஸ்ட் மாஸ்டர் ஹரி சங்கர் திவாரியை அழைத்து பாஸ் புக்கில் சொல்லப்பட்ட பணம் லெட்ஜரில் இல்லை என்று புகார் எதும் கேட்டு வாங்கினாரா என்றால் இல்லை. போஸ்ட் மாஸ்டர் இது சம்மந்தமாக எழுத்து மூலமான அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு கொடுத்தாரா என்றால் இல்லை வாய் மொழியாக தகவல் சொன்னார்.

4) நான் மூன்று நாட்கள் சேமிப்பு பிரிவில் வேலை பார்க்குமாறு போஸ்ட் மாஸ்டர் எழுத்து மூலமான உத்தரவு கொடுத்தாரா என்றால்  இல்லை. போஸ்ட் மாஸ்டர் அன்றைய தினமே என்னிடம் இது சம்மந்தமாக அறிக்கை தறுமாறு கேட்டு வாங்கினாரா என்றால் இல்லை. நான் முன் விசாரணையில் சொல்லியதுபோல் 16.01.1996 ல்  ஹரி சங்கர் திவாரி அஞ்சல அலுவலகத்திற்கு வரவில்லை என்றாலும் அவர் வித்ட்ராவல் பார்ம் எழுதி தரவில்லை என்றாலும் நான் போஸ்ட் மாஸ்டரிடம் பாஸ் புத்தகத்திற்கும் லெட்ஜருக்கும் இடையே வித்தியாசம் இருக்கு என்று சொல்லவில்லை என்றாலும் ஹரி சங்கர் திவாரிக்கு ரசீது கொடுத்து அவரது பாஸ் புக்கை வாங்கி போஸ்ட் மாஸ்டரிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும்  போஸ்ட் மாஸ்டர் தலைமை அலுவலகத்திற்க எந்த தகவலும் தரவில்லை என்றாலும் எங்கள் அலுவலக உயர் அதிகாரி சொல்லி கொடுத்து போஸ்ட் மாஸ்டர் மணியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.07.22 20:13:17 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.